TNTPO

# வர்த்தக வணிக கண்காட்சிகளை நடத்துவதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்

## சென்னை வர்த்தக மையம்

TNTPO

# நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்

## வர்த்தக கண்காட்சிகளை நடத்துவதற்கு பின்பற்ற வேண்டிய பொதுவான மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்.

- இடம் வழங்குபவர்கள்
- கண்காட்சி அமைப்பாளர்கள்
- சேவை வழங்குபவர்கள்
- கண்காட்சியாளர்கள்
- வணிக பார்வையாளர்கள் / பிரதிநிதிகள்





TNTPO



# பொதுவான தடுப்பு நடவடிக்கைகள்

- குறைந்தபட்சம் 6 அடி தூரம் சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவும்
- முகக்கவசம் கட்டாயம்
- முறையான ஆல்கஹால் அடிப்படையாகக் கொண்ட கிருமிநாசினியைப் பயன்படுத்தி கைகளை அடிக்கடி சுத்தப்படுத்திக் கொள்ளவும் (குறைந்தது 20 வினாடிகள்)
- சுவாச ஆசாரம் (திசு காகிதம் அல்லது கைக்குட்டைகள்) கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும்.
- பொது இடங்களில் எச்சில் துப்பக்கூடாது.
- கைபேசியில் 'ஆரோக்யா சேது' செயலியை (App) நிறுவுவது கட்டாயமாகும்.
- 65 வயதுக்கு மேற்பட்டவர்கள், நோயுற்றவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் குழந்தைகள் (10 வயதுக்குக் குறைவானவர்கள்) வீட்டில் தங்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- கொரோனா நோய்அறிகுறியுடன் கூடிய நபர் எவரேனும் கண்டறியப்பட்டால் மாநில (அ) மாவட்ட உதவி எண்ணிற்கு விரைவாக தெரியப்படுத்துதல் வேண்டும்

TNTPO

நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்

# இடம் வழங்குபவர்களுக்கான நடவடிக்கைகள்





கைபேசியில் ‘ஆரோக்யா சேது’ செயலியை (App) நிறுவுவது கட்டாயமாகும்.



அனைத்து நுழைவு / வெளியேறும் வாயில்களிலும் வெப்ப துப்பாக்கிகள் மற்றும் கிருமிநாசினிகள் போன்ற உபகரணங்களுடன் கூடிய ஊழியரை நியமிக்க வேண்டும்.



அனைத்து பாதுகாப்பு மற்றும் துப்புரவு ஊழியர்களும் முகக்கவசம் மற்றும் கையுறைகளைப் பயன்படுத்த வேண்டும்.









பல்வேறு தனித்தனியான நுழைவு மற்றும் வெளியேற்ற வாயில்களை அமைத்தல் மற்றும் போதுமான காற்றோட்ட வசதி போன்றவற்றிற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

# நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்



இணையவழி பணபரிவர்த்தனை ஊக்குவிக்கப்பட வேண்டும்



நிரந்தர அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்ட அறை (Isolation Ward) உருவாக்க வேண்டும்.



உணவு மற்றும் குளிர்பான விற்பனை நிலையங்கள் கட்டாயமாக கண்ணாடி தடுப்பான்களுடன் அமைக்கப்பட வேண்டும். அதில் பணியாற்றும் பணியாளர்கள் முகமூடிகள் மற்றும் கையுறைகளை அணிய வேண்டும்.



நன்கு திட்டமிடப்பட்டு குப்பைகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.



கண்காட்சி அரங்குகளில் ஒரு நபருக்கு 3.25 சதுர மீட்டர் இடைவெளி அனுமதிக்கப்படலாம். (10,000 சதுர மீட்டர் அரங்குகளில் அதிகபட்சம் 3076 நபர்கள் இருக்க வேண்டும்; 5,000 சதுர மீட்டர் அரங்குகளில் அதிகபட்சம் 1538 நபர்கள் இருக்க வேண்டும்).



உள் அரங்கங்களில் அதிகபட்சம் 50 விழுக்காடு (50%) இருக்கைகள் அல்லது அதிகபட்சமாக 600 நபர்கள் பங்கேற்கும் வண்ணம் உச்சவரம்பு அனுமதிக்கப்படும்.

TNTPO

நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்

# கண்காட்சி அமைப்பாளர்களுக்கான நடவடிக்கைகள்



கண்காட்சி நேரங்களில் கூட்ட நெரிசல்களை கையாளுவதற்கு முன்கூட்டியே திட்டமிடப்பட வேண்டும்.



அரங்குகளில் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் ஏற்படுத்தப்பட்ட பாதைகள், பதிவு மேசைகளுக்கு முன்னால், சாவடிகள் மற்றும் பொது வழிப்பாதைகள் போன்ற இடங்களில் வரிசையில் நிற்கும்போது குறைந்தபட்சம் 6 அடி வரை சமூக இடைவெளியை கடைபிடிக்க அறிவுறுத்தப்பட வேண்டும்.



கொரோனா வைரஸ் தடுப்பு வழிமுறைகள், விழிப்புணர்வு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து பதிவு செய்யப்பட்ட செய்திகள் / அறிவிப்புகளை தொடர்ந்து இயக்க வேண்டும்.




கைகுலுக்குதலிற்கு மாற்றாக 'நல்வரவு' வாழ்த்துக்களை ஊக்குவிக்கவும்.

# நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்

TNTPO



கண்காட்சி வளாகத்தில் மருத்துவர்கள் மற்றும் ஆம்புலன்ஸ் வசதி இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.




கண்காட்சிக்கு வரும் நபர்களுக்கு விழிப்புணர்வு பதாகைகள் நிறுவுதல் வேண்டும்.



பார்வையாளர்களுக்கு முகக்கவசம், தண்ணீர், கிருமிநாசினி போன்ற எந்தெந்த பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும் என்பது குறித்த தகவல்களை முன்னதாகவே கொடுக்க வேண்டும்



போதுமான எண்ணிக்கையிலான பதிவு செய்தல் / அனுமதி சீட்டு பெறும் இடம் போன்ற இடங்களில் சமூக இடைவெளி உறுதி செய்ய வேண்டும்.




மனித இடைமுகத்தைக் குறைக்க தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கவும்.

# நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்



ஒரு குறிப்பிட்ட இடத்தில் பார்வையாளர்கள் / பிரதிநிதிகளின் எண்ணிக்கையை தொழில்நுட்பம் அல்லது பிற வழிகளில் கண்காணிப்பதன் மூலம் நிகழ்நேரத்தில் பார்வையாளர்களின் வருகை மற்றும் வெளியேற்றத்தைக் கண்காணிக்கலாம்.



அமைப்பாளர்கள் குறைந்தபட்சம் 3மீ x 3மீ (நான்கு பக்கங்களும், மூடிய மேற்பரப்பு மற்றும் பூட்டக்கூடிய கதவு) முகக்கவசம், வெப்ப துப்பாக்கிகள், கைசுத்திகரிப்பான், தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் (PPE Kit) போன்ற போதுமான வசதிகளைக் கொண்ட குறைந்தபட்சம் ஒரு தனிமைப்படுத்தும் அறையை ஏற்படுத்தியும் கொரோனா நோயாளியைக் கையாள்வதில் திறமையான அமைப்பாளர்களால் நிர்வகிக்கப்பட வேண்டும்.




நோய்த்தொற்று அறிகுறிகள் கண்டறியப்பட்ட கொரோனா நோயாளியை பாதுகாப்பாக தனிமைப்படுத்தும் அறைக்கு மாற்றுவதை உறுதிசெய்ய வேண்டும்.




கண்காட்சிக்கான மருத்துவ அவசர ஊர்தி, முழுநேர மருத்துவர், சுகாதார ஊழியர்கள் / செவிலியர்கள் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுடன் (PPE Kit) நிர்வகிக்கப்படுகின்றனரா என்பதை உறுதிபடுத்திக் கொள்ளவும்.

TNTPO

# நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்



**கண்காட்சி அமைப்பாளர் அனைத்து சேவை கூட்டாளர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் கொண்ட கொரோனா (COVID 19) குழுவை அமைக்க வேண்டும் .**



**கண்காட்சி நடக்கும் நாட்கள் வரை அமைப்பாளர்கள் மீண்டும் மீண்டும் அனைத்து பங்குதாரர்களுக்கும் அவசர தொடர்பு எண்களை அடையாளம் கண்டு தெரிவிக்க வேண்டும்**




**வீட்டிலேயே நுழைவுச் சீட்டுகளை அச்சிடும் மற்றும் இணையவழி பதிவு முறைகளை ஊக்குவிக்கவும். மேலும் பதிவு செய்யும் போது QR குறியீடு உருவாக்கப்படலாம் மற்றும் அமைப்பாளரால் அந்த குறிப்பிட்ட QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் கண்காட்சி வளாகத்திற்குள் நுழைவதை அனுமதிக்கலாம்.**

## சேவை வழங்குபவர்களுக்கான நடவடிக்கைகள்




அனைத்து பார்வையாளர்களிடமிருந்தும் முறையாக நிரப்பப்பட்ட சுய சுகாதார அறிவிப்பு படிவங்களை சேகரிக்க வேண்டும்.




கண்காட்சி நடைபெறும் இடத்தின் நுழைவாயிலில் கட்டாய உடல் வெப்ப ஊடுகதிர் இயந்திரத்தை பயன்படுத்தி போதுமான சமூக (குறைந்தபட்சம் 6 அடி தூரம் ) இடைவெளியுடன் கண்காணிக்க வேண்டும்.

### கண்காட்சியை அமைக்கும் போது:



- உறுதிப்படுத்தப்பட்ட விளம்பர வடிவமைப்பை முடிந்தவரை சொந்த வளாகத்தில் முன்ஏற்பாடு செய்துகொள்ளவும்.
- தொழிலாளர்கள், மேற்பார்வை ஊழியர்கள் போன்றவர்களிடையே தேவையான சமூக இடைவெளியை உறுதி செய்யவும்.





### தயாரிக்கப்பட்ட பொருட்களை கண்காட்சி இடத்திற்கு கொண்டு செல்லும் போது:


- தரையிறங்குவதற்கு முன்பாக கனரக வாகனம், விநியோக வாகனம் மற்றும் அனைத்து பொருட்களையும் சுத்தப்படுத்தவும்.

# நிலையான வழிகாட்டு நெறிமுறைகள்



- ஓட்டுநர் மற்றும் பொருள் போக்குவரத்தில் ஈடுபடும் பிற பணியாளர்கள் கட்டாயமாக சமூக இடைவெளியை கடைபிடிக்கவும் (ம) அனைத்து தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணம் (PPE Kit) அணியவும் வேண்டும்.





தொழிலாளர்கள் பயன்படுத்துவதற்கு முன்பு அனைத்து உபகரணங்களுடனும் தளவாடங்கள் மற்றும் கிடங்குகளை சுத்தம் செய்யவும்.



## போக்குவரத்தின் போது:

- பேக்கேஜிங் செய்வதற்கு முன்பு கண்காட்சி பொருட்களை சுத்தப்படுத்தவும்.
- கண்காட்சி இடத்திற்கு கண்காட்சி பொருட்களின் தொடர்பு இல்லாத போக்குவரத்தை உறுதிசெய்யவும்.



TNTPO

# நிலையான  வழிகாட்டு நெறிமுறைகள்

## வணிக பார்வையாளர்கள் / பிரதிநிதிகளுக்கான நடவடிக்கைகள்



பார்வையாளரின் உடல் வெப்பநிலை சாதாரணமாக இருந்தால் மட்டும் உள்ளே நுழைய அனுமதிக்கப்படுவார்கள் .



உடல் பரிசோதனை அவசியமெனில், உடல் வெப்பநிலை கண்காணிப்பிற்கு பிறகு உடல் பரிசோதனை செய்ய வேண்டும்.



முகக்கவசம் அணிந்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள்.



வர்த்தக கண்காட்சி அமைப்பாளரால் பரிந்துரைக்கப்பட்ட அனைத்து வழிகாட்டுதல்களையும் பார்வையாளர்கள் பின்பற்ற வேண்டும்.